(இ) ஆமெனில், 1972–73, 1973–74 ஆண்டுகளில் அவ்வாறு எத்தனை மருத்துவர்கள் முகமையில் அனுப்பப்பட்டனர்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) கால் நடை மருத்துவப்பணியில் (இதில் செம்மறியாடுகள் வளர்ப்பும் அடங்கும்) பயிற்சி பெறுவதற்காக கால்நடை வளர்ப்புத்துறையிலிருந்து 1972–73-ல் ஓர் அதிகாரி ஆஸ்திரேலியாவிற்கு முகமையில் அனுப்பப்பட்டார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சில சமயங்களிலே, உறுப்பினர்கள் வராதபோது, மற்ற உறுப்பினர்கள் அந்தக் கேள்விக்கு பதில் கேட்கிறார்கள். அநேகமாக "ஆம்", "இல்லை" என்ற அளவிலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள். அமைச்சர் அவர்களுக்குத் தக்க பதில்கள் வந்திருக்கின்றதால், அந்த உறுப்பினர் இல்லாவிட்டாலும், முழு பதிலையும் அவர்கள் படித்தால் இருப்பவர்களுக்கு அது பயன் படுவதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வரமுடியாத உறுப்பினர்கள், இருக்கின்ற உறுப்பினர்களிடத்திலே இன்னின்ன உப கேள்விகள் கேளுங்கள் என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்களானால், போதுமானது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பேசுகின்றவர்கள், பேசப் போகிறேன் என்று சொல்லி பெயர் கொடுத்துவிட்டு, வெளியே போய் விடுகின்றார்கள். அதற்கு என்ன பண்ணுவது?

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, செம்மறியாடு வளர்ப்பு பற்றி பயிற்சி பெறுவதற்காக ஆஸ்திரேலியா நாட்டிற்கு கால்நடை மருத்துவர்கள் அனுப்பப்பட்டதாகக் கேள்வி. இதைப் போன்று சில நிறுவனங்கள், அந்தத் துறையைச் சேர்ந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மேற் பயிற்சிக்காக அனுப்புகின்றன. அப்படியே பால் பண்ணையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி அனுப்பப்பட்டார். ஆனால் அவரை அதே துறையில் வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை அனுப்பாமல், அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்களை அனுப்புகின்ற ஒரு புதிய முறையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தற்போது இந்தக் கேள்விக்கு இடமில்லை. செயலாளர் பதவியில் இருந்த ஒருவர்தான் அனுப்பப்பட்டார். அவர் ஐ. ஏ. எஸ். அதிகாரி. பாக்கி அனைவருமே இந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள்தான். அவர்கள்தான் இப்போது இருக்கின்றார்கள். அவர்கள்தான் அனுப்பப்பட வேண்டுமென்ற முறை இப்போது இருக்கிறது. அவர்கள்தான் அனுப்பப்படுகின்றார்கள்.

Temple properties

* 129. Q. THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased o state—

1975 மார்ச் 7]

(*a*) whether any representation has been received by the Government regarding the removal of time-limit for redemption of temple properties from those who have been enjoying the same unauthorisedly ; and

(*b*) if so, the action taken thereon ?

திருக்கோயில்களின் சொத்துக்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருக்கோயில்களின் சொத்துக்களை முறைகேடாக அனுபவிப்பவர் களிடமிருந்து மீட்க உள்ள காலத்தடையை நீக்கவேண்டும் என்று அர சுக்குக் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) வக்ப் போர்டு சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட்டிருந்தால் அவை களை மீட்க நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்காது நேரடியாக மாவட்ட ஆட்சியாளர் மூலம் நடவடிக்கை தொடர்ந்து அச்சொத்துக்களை மீட்க வழிவகைகள் உள்ளன. இதே போன்ற வழிவகைகள் காண தமிழ் நாடு இந்து மத அறநிலையச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த திருக்கோயில் களினுடைய சொத்துக்கள் எவ்வளவு ஏக்கர் ? தமிழ்நாட்டில் தனி நபருடைய கையிலே எவ்வளவு இருக்கும் என்பதை அறிய ஒரு ஸ்பெஷல் ஸ்குவாட் அரசாங்கம் அமைத்தது என்று கேள்விப்பட்டேன். அப்படி எவ்வளவு ஏக்கர் எடுக்கப்பட்டது என்பதையும், எடுக்கப் பட்ட அந்த நிலத்திலிருந்து எவ்வளவு வருமானம் என்றும் அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தனி ஸ்குவாட் அமைத்ததற்குப் பிறகு சுமார் 2 லட்சம் ஏக்கர் கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறது. தேவையான நடவடிக்கைகள் எடுத்து சுமார் 85 ஆயிரம் ஏக்கர் நிலம் நம்முடைய துறையினுடைய ஆளுகையின் கீழே வந்திருக்கின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய வரு மானம் பற்றி கணக்கு இன்னும் பார்க்கப்படவில்லை. சரியான புள்ளி விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, வக்ப் போர்டுக்கு உள்ளது போன்ற ஒரு அதிகாரத்தை இந்து அறநிலையத் துறைக்குக் கொடுப்பதைப்பற்றி அரசு பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள்

சொன்னதற்கு மகிழ்ச்சி. இதில் ஏற்கெனவே ஏராளமான நம் கோயில் சொத்துக்கள் பலரிடம் இருக்கின்றன. இதை நாம் திரும்பப் பெறவேண்டும் என்றால், கோர்ட்டுக்குப் போய்த்தான் ஆகவேண்டி யிருக்கின்றது. எக்சிகியூடிவ் ஆபீசர்கள் கோர்ட்டுக்குப்போய் சூட் போட்டுத்தான் ஆகவேண்டியிருக்கின்றது. வக்ப் போர்டுக்கு அந்தக் கஷ்டம் இல்லை. அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதிய உடனே அந்த பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை மீட்டு போர்டு ஒப்புவித்துவிடுகிறார்கள். ஆனால் இந்து அறநிலைய போர்டுக்கு அந்த மாதிரி அதிகாரம் இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, வக்ப் போர்டும் கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கோர்ட்டுக்குப் போய்த்தான் ஆகவேண்டும். கோர்ட்டுக்குப் போய்க்கூட பல வழக்குகள் தோற்றுவிடுகின்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இதிலே யுள்ள சட்டதிட்டத்தைப் பொறுத்தவரையில், அறநிலையத் துறையினுடைய ஆணையாளர், அதாவது மேல் அதிகாரியின் அனுமதியில்லாமல் துறையைச் சேர்ந்த கீழிருக்கின்ற அதிகாரிகள், அறங்காவலர்கள் சொத்துக்களை அப்படி விற்று வாங்கியது செல்லாது என்பதற்கு கோர்ட்டுக்குப் போகவேண்டும். அந்த நிலைமையிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்களே அதை "கான்சல்" செய்து மீண்டும் அந்த நிறுவனத் திற்கே கொடுக்கவேண்டும் என்பதற்காக இத்தகைய சட்டத்தைக் கொண்டு வர இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கின்றோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே, வக்ப் போர்டு சட்டப்படி 36-வது பிரிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை செய்து வக்ப் போர்டுக்குச் சொந்தமானது என்று அறிவித்து விட்டால், சொத்தை ஆக்கிரமமாக வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான் வழக்குக்குப் போகவேண்டுமே தவிர, வக்ப் போர்டு போக வேண்டியதில்லை. அந்த மாதிரி நிலைமையில் இந்த அறநிலையத்துறை இல்லை என்பதை தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்த வக்ப் போர்டிலே உள்ள சட்ட திட்டங்களையும் அந்த விதி முறைகளையும் ஆராய்ந்து நம்முடைய துறைக்கும் அது பயன்படுமானால், எதிர்காலத்தில் நம்முடைய துறையிலே இருக்கின்ற சட்டத்தைத், திருத்துவதற்கும நடவடிக்கை மேற்கொள்ளலாம.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இப்போது இந்து அறநிலையத் துறையிலே இருக்கின்ற சட்டத்தையே வக்ப் போர்டுக்கும் அமுல் படுத்தலாமா என்று பரிசீலிக்கப்படுகின்ற நிலைமைதான் இருக்கின்றது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போலத் தான் நிலைமை இங்கும் இருக்கின்றது.